**செய்தி வெளியீடு எண் : 517** **நாள்: 01.04.2022**

# செய்தி வெளியீடு

2020-21 ஆம் கல்வியாண்டில், B.S.M.S / B.A.M.S / B.H.M.S. இளங்கலை மருத்துவப் பட்டப் படிப்பினை வழங்கிடும் சுயநிதி இந்திய மருத்துவமுறை (சிறுபான்மையினர் / சிறுபான்மையினர் அற்ற) மருத்துவக் கல்லூரிகளில் உள்ள இருக்கைகளுக்கு 2 கட்டங்களாக நடைபெற்ற நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களுக்கான கலந்தாய்வின் முடிவில் காலியாக உள்ள இருக்கைகளுக்காக சென்னை-106, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகத்தில் அமைந்துள்ள தேர்வுக் குழு அலுவலகத்தில் 18.04.2022 அன்று காலை 10.00 மணியளவில் உடனடி கலந்தாய்வு நடைபெற உள்ளது.

சுயநிதி இந்திய மருத்துவமுறை (சிறுபான்மையினருக்கான/ அனைவருக்குமான) மருத்துவக் கல்லூரிகளில் உள்ள B.S.M.S / B.A.M.S/ B.H.M.S. இளங்கலை மருத்துவப் பட்டப் படிப்பு பயில்வதற்கு நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் காலி இருக்கைகளுக்காள மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பங்கள் மேல்நிலைப் பள்ளி தேர்வில் முதன் நேர்வில் அறிவியல் மற்றும் ஆங்கிலப் பாடங்களை எடுத்து தேர்ச்சி பெற்றும் மற்றும் 2021ஆம் ஆண்டுக்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் (NEET U.G. 2021) கலந்து கொண்டு தகுதிக்கு தேவையான சதமான மதிப்பெண்களை பெற்றவர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

**விண்ணப்பக் கட்டணம்**: அனைத்து வகுப்பினரும் விண்ணப்பக் கட்டணமாக ரூ.1000/-(ரூபாய் ஆயிரம் மட்டும்) 08.04.2022 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ இணைய வழியாகவும், அதற்குப் பிறகு, 18.04.2022 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ நேரில் பணமாகவும் செலுத்த வேண்டும்.

கடந்த 2 கட்டங்களாக நடைபெற்ற கலந்தாய்வில் வருகைபுரியாதவர்கள், தாமதமாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தவர்கள், முன்னர் நடைபெற்ற கலந்தாய்விற்கு விண்ணப்பிக்க தவறியவர்கள் போன்றோர் இந்த உடனடி கலந்தாய்வில் கலந்து கொள்ள விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் தொகுப்பிளை 01-04-2022 முதல் 08-04-2022 முடிய பிற்பகல் 05.00 மணி வரை மட்டும் எங்களது அலுவலக வலைதளமான **www.tnhealth.tn.gov.in** பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் தேவையான அனைத்து இணைப்புகளுடன் (தங்களது சுயசான்றொப்பமிட்ட சாதி சான்றிதழின் நகல், +2 மதிப்பெண் சான்றிதழின் நகல் போன்றவை) வருகின்ற 18.04.2021 அன்று காலை 08.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிக்குள்ளாக உரிய விண்ணப்பக் கட்டணத்துடன் ரொக்கமாக ரூ.1000/-(ரூபாய் ஆயிரம் மட்டும்) சென்னை -106, அரும்பாக்கம், அறிஞர் அண்ணா மருத்துவ வளாகம், மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகத்தில் அமைந்துள்ள தேர்வுக் குழு அலுவலகத்தில் கண்டிப்பாக நேரடியாக மட்டும் சமர்ப்பித்தல் வேண்டும். நண்பகல் 12.00 மணிக்கு மேல் பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் கண்டிப்பாக பெறப்படமாட்டாது.

பொது தரவரிசை பட்டியல் அன்றைய தினமே முறையான சான்றிதழ் கலந்தாய்விற்கு பின்னர் பிற்பகல் 1.30 மணியளவிலேயே வெளியிடப்பட்டு, அன்றைய தினமே பிற்பகல் 2.00 மணியளவில் கலந்தாய்வு நடைபெறும். இட ஒதுக் கீட்டு ஆணைகள் பொது தரவரிசை பட்டியல் அடிப்படையில் பிறப்பிக்கப்படும். மேலும் 2021-22-ஆம் கல்வியாண்டு B.S.M.S / B.A.M.S / B.H.M.S. இளங்கலை

மருத்துவப் பட்டப் படிப்பிற்கான தகவல் தொகுப்பேட்டில் காணப்படும் அனைத்து உரிய விதிகளும் இக்கலந்தாய்விற்கும் பொருந்தும். தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் கலந்தாய்வு கட்டணமான ரூ.1000/- மற்றும் பகுதி கல்விக் கட்டண முன்பணம் ரூ.25000/- உடன் தங்களது அனைத்து அசல் சான்றிதழ் அல்லது தற்போது படித்து வரும் கல்லூரியிலிருந்து பெறப்பட்ட ஆளறி (Bonafide Certificate) சான்றிதழ் உடன் தேவையான நகல் சான்றிதழ்களை சமர்ப்பித்து கலந்து கொள்ளலாம்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in